
10/=
பக்கங்கள் 08
Registered as a Newspaper in Srilanka
# எதிரொலி
Ethiroli
குரல் 01 அதிர்வு 249. ஞாயிற்றுக்கிழமை ஜனவரி 28 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48

## சவாலுக்குத் தயார்!



கொழும்பு, ஜன.28

ஜனாதிபதி மைத்திரியின் சவாலை ஏற்று, மத்திய வங்கியின் சர்ச்சைக்குரிய பிணை முறி மற்றும் பாரிய ஊழல் மோசடிகள் குறித்த அறிக்கைகள் தொடர்பில் விவாதிக்க பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கூட்டவுள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க அறிவித்துள்ளார்.

தெனியாயவில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

“நேற்றுமுன்தினமிரவு சபாநாயகரை சந்தித்த போது,பிணை முறி மற்றும் பாரிய ஊழல் மோசடிகள் குறித்த அறிக்கைகள் 06▶



## சர்வதேச கிரிக்கெட் மைதானம் மண்டைதீவில் அமைக்க ஆய்வு

யாழ்ப்பாணம், ஜன. 28

மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானத்துடன் விளையாட்டு நகரம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான திட்டத்தை இலங்கைக் கிரிக்கெட் சபையின் தலைவரும் பிரதி சபாநாயகருமான திலங்க சுமதிபால நேற்று நேரில் ஆராய்ந்தார்.

இதற்காக நேற்று யாழ்ப்பாணம் வந்த அவர், மைதானம் அமையவுள்ள இடத்தை நேரில் சென்று பார்வையிட்டார். அவருடன் வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே, நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் வடக்கு ஆளுநரின் செயலர் எல். இளங்கோவன் ஆகியோரும் மண்டைதீவுக்கு சென்றனர். 06▶

## இராணுவத்தை மீளக் கட்டமையுங்கள்

### அரசுக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆலோசனை

கொழும்பு, ஜனவரி 28

இராணுவத்தை மீளக் கட்டமைக்குமாறு ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் மட்டக் குழு அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. அந்தக் குழு வெளியிட்டுள்ள 26 பக்கங்கள் கொண்ட அறிக்கையிலேயே இந்தப் பரிந்துரை விதந்துரைக்கப்பட்டுள்ளது.

இலங்கை வந்த ஐரோப்பிய ஒன்றியத் தூதுக் குழுவிடம் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், அரச சார்பற்ற அமைப்புகள் முன்வைத்த கருத்துக்களே இந்தப் பரிந்துரையை ஐரோப்பிய ஒன்றியம் முன்வைக்கக் காரணம். 06▶




கிருபா லேணர்ஸ்
KIRUBA LEARNERS
இல. 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 4353, 021 492 3200, 077 722 5292

அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை

- குறிப்பிட்ட காலப் பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்
- மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி
- எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்பு நடைமுறை
- கனரக சாரதி அனுமதிப்பத்திரம் பெற அசோக் லேடன் பஸ் மூலம் இலகுவான பயிற்சி
- தவணை முறைக் கட்டணம், விரும்பிய நேரத்தில் பயிற்சி
- இரவு நேர வாகனப் பயிற்சி 06 பி.ப. - 09 பி.ப.

பெண் ஆசிரியரால் பெண்களுக்கு வாகனப் பயிற்சி வழங்கப்படும்.

நட்புறவான அணுகுமுறையில் ஆண், பெண் இரு பாலாருக்கும் தனித்துவமான பயிற்றுவிப்பாளர்கள்



**யாழ்ப்பாணம்**
021 224 2022, 071 454 6958
021 300 6550, 071 454 6958
கண்டி வீதி, சாவகச்சேரி
021 492 3202, 021 227 0700
பருத்தித்துறை வீதி, ஆவரங்கால்
021 300 6550, 077 242 2622
39, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ். கச்சேரி, யாழ்ப்பாணம்
021 222 6699

**கிளிநொச்சி**
ஏ9 வீதி, கிளிநொச்சி (கச்சேரி முன்பாக)
021 228 5505, 071 454 6955
வாடியடிச்சந்தி, பூநகரி
021 320 1818, 070 333 7171

**வவுனியா**
216, ஏ9 வீதி, வவுனியா (வசந்தி திரையரங்கு முன்)
024 222 7777, 0777 100 444

**மன்னார்**
94, பிரதான வீதி, மன்னார்
023 225 1656, 077 847 2732

## வேட்பாளர்கள் மீது சாவகச்சேரியில் தாக்குதல்

சாவகச்சேரி, ஜன. 28

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர்கள், ஆதரவாளர்களை இனந்தெரியாத குழு ஒன்று விரட்டி விரட்டித் தாக்கியுள்ளது என சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையின் 16 ஆம் வட்டாரத்தில் போட்டியிடும் குமாரவேல், நகர சபையின் 5 ஆம் வட்டாரத்தில் போட்டியிடும் இராமச்சந்திரனும் இவர்களின் ஆதரவாளர்களுமே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளனர். 06▶

## அரசாங்கம் அமைக்கத் தயார் சகலரும் ஓரணியில் சேருங்கள்

### மகிந்த அணியினருக்கு ஜனாதிபதி அழைப்பு



கொழும்பு, ஜன. 28

நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் 96 உறுப்பினர்களும் ஒரே அணியில் இருப்பார்களானால் நாளையே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் அரசாங்கம் அமைக்கத் தயார் எனத் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டுத் தனியாக செயற்படுபவர்கள் புதிய கட்சியை அமைக்க முயல்கிறார்கள். அவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் அமைத்தால் ஒன்றிணையத் 06▶



உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்
உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்
- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES
Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.


உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்

# வவுனியா சைவப்பிரகாசவில் நல்லிணக்கப் பொங்கல் விழா









வவுனியா, ஜன.28

தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சின் கீழ் கெப்பட்டிக்கொல்லாவ கல்வி வலயம் முற்றும் வவுனியா தெற்கு வலயமும் இணைந்து நடத்திய பொங்கல் விழா வவுனியா சைவப்பிரகாச ஆரம்பப் பாடசாலையில் அதிபர் திருமதி தி.யுவராஜா தலைமையில் நேற்றுக்காலை நடைபெற்றது.

சிங்கள - தமிழ் ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் மற்றும் இரு இன ஆசிரியர்களும் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் தமிழரின் பாரம்பரியத் திருநாளான தைத்திருநாளின் சிறப்பினை வெளிப்படுத்தும் வகையில் பொங்கல் பொங்கும் நிகழ்வு இடம்பெற்றது. அத்துடன் குறித்த நிகழ்வின் நோக்கம் தொடர்பாக இரு மொழிகளிலும் மாணவர்களுக்கு விளக்கமும் அளிக்கப்பட்டது.

கயிறு இழுத்தல், ஓட்ட போட்டி போன்ற மைதான நிகழ்வுகளும், நடனம், நாடகம், பாடல் போன்ற பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

ஆரம்பப் பாடசாலை மாணவர்களிடையே இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான இந்நிகழ்வில் , வவுனியா தெற்கு கல்வி வலய உயர் அதிகாரிகள், கெப்பிட்டிகொல்லாவ கல்வி வலய உயர் அதிகாரிகள், ஆசிரியர்கள், கெப்பிட்டிகொல்லாவ, வவுனியா சைவப்பிரகாச ஆரம்ப பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (அ)

## 2 கோடி ரூபா லஞ்சம் வாங்கியதை நிரூபித்தால்

# பதவி துறக்கத் தயார்!



வவுனியா, ஜன.28

" நான் அரசிடமிருந்து 2 கோடி ரூபா இலஞ்சம் பெற்றேன் என நிரூபித்தால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறப்பேன்" என சவால் விட்டுள்ளார் வன்னி மாவட்டத்துக்கான நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வவுனியா சாஸ்திரிகூழாங்குளத்தில், வவுனியா தெற்கு பிரதேச சபையில் போட்டியிடும் , தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் மருத்துவர் ப.சத்தியநாதனை ஆதரித்து இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

" எங்கள் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய தீர்வை இல்லாதொழிக்கவும், எங்களுடைய கட்சியை உடைப்பதற்கும் எங்கள் கட்சி மீது பொய்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்துகின்றார்கள்.

கடந்த ஜனாதிபதி தேர்தலிலே ஐக்கிய தேசிய கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, மகிந்த ராஜபக்சவின் பின்னணியில் பொய்யான பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து , ஐ.தே.கவுக்குள் பிரிவினையை உண்டுபண்ணினார். அதேபோன்று, இப்போது எங்களது கட்சிக்குள் இருந்த சிவசக்தி ஆனந்தன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரண்டு கோடி ரூபா இலஞ்சம் பெற்றார்கள் என்று கூறுகிறார். அவ்வாறு இலஞ்சம் பெற்றிருந்தால் அதை அவர் நிரூபித்துக் காட்ட வேண்டும். அப்படி அவர் நிரூபித்தால், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்கவும் நான் தயார்.

ஜீ.எல். பீரிஸுக்கும் , சிவசக்தி ஆனந்தனுக்கும் தொடர்பிருக்கின்றது. இரண்டு கோடி ரூபாவைக் கூட்டமைப்பு.எம்.பிக்கள் வாங்கியுள்ளனர் என்று சிவசக்தி ஆனந்தன் கூறும் போது, தெற்கில் இருந்து மகிந்தவின் ஆலோசகராக இருந்தவரும் மகிந்தவினால் உருவாக்கப்பட்ட புதிய கட்சியின் முக்கிய பிரமுகருமான ஜீ.எல். பீரிஸ் வழக்குப் போட வேண்டும் என்று கூறுகின்றார்.

மகிந்த ராஜபக்ச கடற்றொழில் அமைச்சராக இருந்த போது சுரேஷ் பிரமச்சந்திரன் மகிந்த ராஜபக்சவின் ஆலோசகராகச் செயற்பட்டவர். தற்போது கூறப்படும் இரண்டு கோடி ரூபா விடயம் தெற்கில் இருந்து வந்துள்ளது. எவ்வாறு கட்சிகளை உடைக்க வேண்டும் என்பது ம்கிந்த ராஜபக்சவுக்கு கைவந்த கலை. ஒவ்வொருவருடைய நிகழ்ச்சி நிரலுக்குப் பின்னாலும் தேசிய ரீதியான கட்சிகளின் ஆதிக்கம் இருக்கின்றது. ஆனால். எங்களுக்குப் பின்னால் எந்தக் கட்சிகளும் இல்லை. எங்களிடம் இருக்கும் ஒரே பலம் மக்கள் பலம் மட்டும் தான்" என்று அவர் தெரிவித்தார். (அ)

# கோரவிபத்தில் மூவர் மரணம்

கொழும்பு, ஜன.28

தனமல்வில - வெல்லவாய பிரதான வீதியில், நேற்றுக்காலை இடம்பெற்ற கோர விபத்தில் மூன்று இளைஞர்கள் பலியானதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது, மேலும் மூவர் படுகாயமடைந்த நிலையில் தனமல்வில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அம்பாந்தோட்டை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இலங்கைப் போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸூம் தனமல்விலவில் இருந்து வெல்லவாயவை நோக்கி பயணித்த மோட்டார் வாகனமும் நேருக்கு நேர் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (அ)

# விசாரணை வளையத்துள் மகிந்தவின் உறவினர்கள்

கொழும்பு, ஜன.28

ரக்பி வீரர் வசீம் தாஜூடீன் படுகொலை செய்யப்பட்டமை குறித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் குடும்பத்தினருடன் நெருங்கிய உறவு வைத்திருந்த சிலரிடம் வாக்குமூலம் பெற்று, விசாரணைகளை முன்னெடுப்பது அவசியம் என பிரதி வழக்குரைஞர் நாயகம் டிலான் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு மேலதிக நீதவான் தர்ஷிகா விமலசிறி முன்னிலையில் அவர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

கொலை இடம்பெற்ற தினம், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் உறவினர் ஒருவர் ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமான இரண்டு வாகனங்களில் சம்பவ இடத்துக்கு சென்றிருந்தமை தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாக பிரதி வழக்குரைஞர் நாயகம் டிலான் ரத்நாயக்க நீதிமன்றத்தில் அறிவித்தார்.

அந்த இரண்டு வாகனங்களிலும் கடற்படை உத்தியோகத்தர்கள் இருவர் பயணித்ததாக தகவல் பதிவாகியுள்ளதுடன், அவர்களிடம் வாக்குமூலம் பெறுவதற்கு தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விசாரணைகளை நிறைவு செய்ய சிறிது காலம் செல்லும் என்பதால், 6 மாதங்களின் பின்னர் வழக்கு விசாரணையை மீள முன்னெடுக்குமாறு பிரதி வழக்குரைஞர் நாயகம் விடுத்த வேண்டுகோளைக் கருத்திற்கொண்ட மேலதிக நீதவான், எதிர்வரும் மே மாதம் 03 ஆம் திகதி வரை வழக்கை ஒத்திவைத்தார்.

கொலை தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்குத் தேவையான வாக்குமூலத்தை இந்த வழக்கின் மூன்றாவது சந்தேக நபராகப் பெயரிடப்பட்டுள்ள கொழும்பு முன்னாள் பிரதம சட்ட வைத்தியர் பேராசிரியர் ஆனந்த சமரக்கோன், இரண்டு வாரங்களுக்குள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரிடம் வழங்க வேண்டும் என நீதவான் இதன்போது உத்தரவிட்டார். 2012 ஆம் ஆண்டு மே மாதம் நாரஹேன்பிட்டி பிரதேசத்தில் வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்த பேரது, ரக்பி வீரர் வசீம் தாஜூடீன் கொலை செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# முன்னாள் அமைச்சர் விரைவில் கைதாவார்

கொழும்பு, ஜன.28

ஜனாதிபதி செயலகத்துக்கு வாகனங்களை கொள்வனவு செய்யும் போது இடம்பெற்றதாக கூறப்படும் இரண்டரைக் கோடி ரூபா நிதி மோசடி தொடர்பில் மகிந்த அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த ஒருவர் விரைவில் கைது செய்யப்படவுள்ளார் எனப் பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த அரசாங்கத்தில் கண்காணிப்பு அமைச்சராக செயற்பட்டவரே இவ்வாறு கைது செய்யப்படவுள்ளாரெனக் கூறப்படுகின்றது.

இது தொடர்பில் கடந்த 25 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தின் முன்னாள் மேலதிக செயலாளர் ஒருவரும் கணக்காளர் ஒருவரும் பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழ்.ஜனாதிபதி மாளிகை சுற்றுலா விடுதியாக மாறும்



கொழும்பு, ஜன.28

3.5 பில்லியன் ரூபாய் செலவில், யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி மாளிகையை, சுற்றுலா விடுதியாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "அதிக செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த மாளிகை, தற்போது மூடப்பட்டுள்ளது. அதன் நன்மைகளை நாட்டுக்கு பெற்றுக்கொடுக்கும் நோக்கில், அந்த மாளிகையை உயர்தரம் வாய்ந்த சுற்றுலாக் ஹோட்டலாக மாற்றுவதற்கு தற்போது சர்வதேச ரீதியாக விலைமனு கோரப்பட்டுள்ளது" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

எதிரொலி Ethiroli
ஞாயிறு, 28 ஜனவரி 2018 ethirolimedia@gmail.com

## கனவுகள் பலிக்குமா?

யாழ்ப்பாணத்தின் நீண்டகாலக் கனவுகளில், சர்வதேசத்துக்கு நிகரான விளையாட்டரங்குகள் நிர்மாணிக்கப்பட வேண்டும் என்பதும் ஒன்று. தமிழர் பகுதிகளில் திறமையான பல வீரர்களும், வீராங்கனைகளும் இருந்தும் அவர்கள் குடத்துள் விளக்காகவே இருக்கிறார்கள். சர்வதேசத் தரத்திலான தங்கள் திறமைகளை வெளிக்காட்டும் வகையிலான விளையாட்டரங்குகள் கிடைக்குமாயின், உரிய பயிற்சிகளை மேற்கொண்டு, குன்றின் மேல் தீபமாக அவர்கள் உயர்வதற்கு அதிக சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. ஆனால் கிடைத்த வளத்தைக் கொண்டு அமைக்கப்பட்ட மைதானங்களை மட்டுமே தமக்குரிய களங்களாகக் கொண்டே வடக்கு மாகாண வீரர்கள் தங்கள் ஆற்றல்களை வளர்த்து வருகிறார்கள்.

மாகாண மட்டப் போட்டிகளைத் தாண்டி, தேசியமட்டப் போட்டிக்கு இந்த வீரர்கள் செல்லும்போது, அங்குள்ள சர்வதேசத் தரத்திலான விளையாட்டரங்குகள் இவர்களுக்கு பார்த்தவுடனேயே மனதளவில் ஒரு மிரட்சியைக் கொடுக்கும். ஏனைய மாகாண வீரர்களுக்கு அத்தகைய தரம் வாய்ந்த, நவீன வசதிகள் கொண்ட விளையாட்டு மைதானங்கள் நன்கு பரிச்சயமானவை. அதனால் அவர்கள் வெகு இயல்பாக அதில் தங்கள் திறமைகளை வெளிக்கொண்டு வருவார்கள். ஆனால் இங்கிருந்து செல்லும் வீரர்களுக்கு ஏற்படும் மிரட்சியே அவர்களுக்குத் தோல்விப் பயத்தை உண்டு பண்ணி விடுவதோடு, சர்வதேசத் தரத்துடன் கூடிய மைதானங்களில் ஒரு வித கூச்சத்துடனேயே அவர்கள் போட்டிகளில் பங்கேற்கிறார்கள். மற்றைய மாகாண வீரர்கள் தங்கள் வீட்டு முற்றத்தில் விளையாடுவது போல சகஜமாகப் போட்டிகளில் பங்கு கொள்ள, நம் வீரர்கள் மட்டும் ஏதோ சந்திரனில் இறங்கியதைப் போன்ற பிரமையோடு பங்கேற்பதால் தன்னம்பிக்கையையும், வெற்றியையும் தொலைத்து விடுகிறார்கள்.

இதை விட இந்த சர்வதேச விளையாட்டரங்குகள் பற்றிய இன்னொரு ஏக்கமும் இருக்கிறது. என்னதான் பல விளையாட்டுக்கள் இலங்கையில் இருந்தாலும் கிரிக்கெட்டுக்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. ஆனால் சர்வதேசக் கிரிக்கெட் போட்டிகளைக் காண வேண்டுமானால், வடக்கு–கிழக்கு மாகாணத்துக்கு வெளியே சென்றால் தான் சாத்தியம். அதனால் எப்போதாவது அத்திபூத்தாற் போன்றே தமிழர் தாயக கிரிக்கெட் அபிமானிகள் அந்தப் போட்டிகளைக் காணச் செல்வது வழக்கம். 'கிரிக்கெட் என்றால் அது பிக் மட்சோடு சரி. அதற்கப்பால் எங்களுக்கும் அதற்கும் பொருந்தாது. தேசிய அணிக்குப் போக வேண்டும் என்றால் பெரிய பெரிய அணிகளில் விளையாடினால் மட்டுமே முடியும். தமிழ்ப் பிரதேச வீரர்களுக்கு அது எட்டாக்கனிதான்' என்ற நிலைப்பாடே பொதுவானதாக இருக்கிறது.

தொடர்ச்சியாக சர்வதேசக் கிரிக்கெட் போட்டிகளைப் பார்ப்பதால் உண்டாகும் இயல்பான தன்னெழுச்சியும், இப்படி நாமும் சர்வதேசப் போட்டிகளில் விளையாட வேண்டும் என்ற உத்வேகமும் சிறுவயதில் இருந்தே மனதில் விதையாகி, அவர்களை அந்த இலக்கு நோக்கி நகர்த்திச் செல்லும். அப்படியான கனவாக இருந்த சர்வதேச விளையாட்டரங்க நகரம், மண்டைதீவில் அமையவுள்ள செய்தி, வடக்கின் வீரர்களுக்கு தேனாக இனிக்கிறது. வெறும் பார்வையிடலோடும், திட்டமிடலோடும் மாத்திரம் இந்த விளையாட்டரங்க நகரக் கனவு அணைந்து போகாமல், நனவானால், இங்கிருந்தும் சர்வதேச வீரர்கள் உருவாவார்கள்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# மகிந்தவை மட்டும் விசாரிக்க தனி நீதிமன்றம் தேவையில்லை

கொழும்பு, ஜன.28

"மகிந்த ராஜபக்சவுக்கு எதிரான ஊழல், மோசடி முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக மாத்திரம் தனியான ஒரு நீதிமன்றத்தை அமைக்க முடியாது. தனி மனிதர் ஒருவருக்காக ஒரு நீதிமன்றத்தை அமைத்தால் உலகம் எம்மைக் கிண்டலாகப் பார்க்கும்" என்று ஐக்கிய தேசிய கட்சி எம்பி அஜித் மன்னப்பெரும கூறினார்.

"கடந்த ஆட்சியில் ஊழல், மோசடி புரிந்தவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்கும் ஊழலற்ற ஆட்சியை அமைப்பதற்குமே மக்கள் எமக்கு ஆணை வழங்கினர். திருடர்களைப் பிடிப்பதென்றால் அரச அதிகாரிகள் பலப்படுத்தப்பட வேண்டும். அதிகாரிகளைவிட திருடர்கள் பலமானவர்கள்.

இதனால்தான் நாம் சுயாதீன ஆணைக்குழுக்களை அமைத்தோம். தகவல் அறியும் சட்டமூலத்தை நிறைவேற்றினோம். சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டத்தை உருவாக்கினோம். இவ்வாறு திருடர்களைப் பிடிப்பதற்காக பல முறைமைகளை உருவாக்கினோம்.

பிணை முறி மோசடி தொடர்பிலும் நாம் உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். ஒருபுறம் அபிவிருத்திப் பணிகளைச் செய்துகொண்டு மறுபுறம் எமது ஆட்சியில் ஊழல், மோசடிகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம். எமது ஆட்சியில் உள்ளவர்கள் அனைவரும் சுத்தமானவர்கள் என்று எம்மால் சொல்ல முடியாது. எதிர்காலத்திலும் ஊழல் இடம்பெறாதவாறு நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

மகிந்தவுக்கு எதிரான முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக தனியாக ஒரு நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்று சிலர் கூறி வருகின்றனர். அவருக்கு எதிரான ஊழல், மோசடி முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக மாத்திரம் தனியான ஒரு நீதிமன்றத்தை அமைக்கமுடியாது. தனி மனிதர் ஒருவருக்காக ஒரு நீதிமன்றத்தை அமைத்தால் உலகம் எம்மை கிண்டலாகப் பார்க்கும். எல்லாவற்றையும் பொதுவாக எடுத்தே விசாரிப்போம்.

அரசுக்குள் இடம்பெறும் ஊழலை ஒழித்துக்கொண்டே நாம் முன்னோக்கிச் செல்வோம். கடந்த ஆட்சியில் இடம்பெற்ற திருட்டுக்களுக்கும் நிச்சயம் தண்டனை வழங்குவோம்" என்று அவர் தெரிவித்தார். (அ)

## திருகோணமலையில் 120 முறைப்பாடுகள்

திருகோணமலை, ஜன.28

எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில், திருகோணமலை மாவட்டம் முழுவதிலும் இருந்து, 120 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக, திருகோணமலை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் சஜீத் வெல்கம தெரிவித்தார்.

வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து நேற்று வரை, குறித்த முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

இவ்வாறான முறைப்பாடுகள் தொடர்பில், தேர்தல் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக, தராதரம் பாராது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் பொதுமக்களிடமிருந்து கிடைக்கப் பெறும் தேர்தல்கள் தொடர்பான முறைப்பாடுகளை ஆராய்ந்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## இலங்கைச் செய்மதிகள் விரைவில் விண்ணுக்கு

கொழும்பு,ஜன.28

இலங்கையில் இருந்து முதல் தடவையாக இரண்டு தொடர் பாடல் செய்மதிகள் விண்ணுக்கு ஏவப்படவுள்ளன.

ஜப்பானின் கியூடெக் நிறுவனத்தின் உதவியுடன் எதிர்வரும் 2019 ஆம் ஆண்டு நெனோ தொழிநுட்பத்துடனான செய்மதியொன்று ஏவப்படவுள்ளதாக ஆதர் சி கிளார்க் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

மற்றைய செய்மதி 2020 ஆம் ஆண்டு ரஷ்யாவின் உதவியுடன் விண்ணில் ஏவப்படவுள்ளது.

இலங்கையை ஒரு அபிவிருத்தி அடைந்த நாடாக கட்டியெழுப்புவதற்கு, விவசாயம், தொடர்பாடல், நீர்வழங்கல் மற்றும் சூழலியல் துறைகள் தொடர்பில் முக்கிய அவதானம் செலுத்தப்பட வேண்டும் என ஆதர் சி கிளார்க் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (அ)

## ஆதிவாசிகளுக்கு அரசியலில் வெறுப்பு

கொழும்பு, ஜன.28

ஆதிவாசி மக்களுக்கு அரசியலில் விருப்பமின்மை ஏற்பட்டுள்ளதாக ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னில எத்தோ தெரிவித்துள்ளார்.

தம்பன பிரதேசத்தில் இடம் பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமது சமூகத்துக்கு அரசியல்வாதிகள் கொடுத்த எந்தவொரு வாக்கும் நிறைவேற்றப்படவில்லையென அவர் குறிப்பிட்டுள்ளார். தமது சமூகம் தொடர்பாக முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகளும் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லையெனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# ஒற்றையாட்சியா? சமஷ்டியா?

கொழும்பு, ஜன.28

"ஒற்றையாட்சி வேண்டுமென்றால் மகிந்தவின் மொட்டுச் சின்னத்துக்கும், சமஷ்டி வேண்டுமென்றால் அரசுக்கும் வாக்களியுங்கள்" என்று மகிந்த அணி எம்.பி ஜயந்த சமரவீர தெரிவித்துள்ளார்.

"இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலை வீதிகள், பாலங்கள் நிர்மாணிக்கும் தேர்தலாகப் பார்க்க வேண்டாம். இந்தத் தேர்தலில் அரசு வென்றால் 2015 ஆண்டு தொடங்கிய ஊழல், மோசடிகள் மேலும் தொடரும். நாடு இரண்டாக பிளவுபடும். ஒற்றையாட்சிக்கு இந்தத் தேர்தலுடன் முடிவுகட்டப்படும்.

இலங்கையில் இடம்பெற்ற மிகப் பெரிய கொள்ளைதான் மத்திய வங்கிப் பிணை முறி மோசடி. இந்தத் திருடர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று நாடுபூராவும் மக்கள் கோரி வருகின்றனர். ஆனால், இதை மூடி மறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்றால் மகிந்தவின் மொட்டுச் சின்னத்துக்கு வாக்களியுங்கள்.

ஒற்றையாட்சி வேண்டுமென்றால் மொட்டுக்கு வாக்களியுங்கள். சமஷ்டி வேண்டுமென்றால் இந்த அரசுக்கு வாக்களியுங்கள். பெப்ரவரி 10 ஆம் திகதி இந்த அரசுக்கு ஆதரவான நிலைப்பாட்டை மக்கள் எடுத்தால் அம்பாந்தோட்டை துறைமுகம்போல் மத்தள விமான நிலையம், திருகோணமலை துறைமுகம் உள்ளிட்ட மிக முக்கியமான அரச சொத்துக்கள் வெளிநாடுகளுக்கு விற்கப்படும்.

கல்வி, வைத்திய சேவையை வர்த்தகப் பொருளாக மாற்றுவதற்கான திட்டங்கள் அனைத்தும் செய்யப்பட்டு விட்டன. பெண்களுக்கும் மது வழங்கப்போகின்றனர். அதனூடாக இவ்வளவு காலமும் கட்டிக் காப்பாற்றப்பட்ட கலாசாரம் சீரழிக்கப் படுகின்றது.

2015 ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் எடுத்த பிழையான தீர்மானத்தை பெப்ரவரி 10 இல் எடுக்க வேண்டாம். இந்த ஊழல், மோசடி தொடர்வதற்கு அனுமதிப்பதா இல்லை அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைப்பதா என்று மக்கள் தீர்மானிக்க வேண்டும்" என்று அவர் கூறினார். (அ)

## இன்று நாளும் கோளும்

28.01.2018 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் தை மாதம் 15 ஆம் நாள்

துவாதசி பி.ப 02.50 | மிருகசீரிடம் மு.ப. 11.21 வரை | சித்தயோகம்

இராகுகாலம் 04.30 - 06.00 | சுபநேரம் காலை 06.00 - 07.00 | எமகண்டம் பி.ப. 12.00 - 01.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சந்தோசம் | பெருமை | நேர்மை | ஓய்வு | ஈகை | சினம் | தனவிருத்தி | அலைச்சல் | கவனம் | தோல்வி | அன்பு | வாழ்வு |



# நல்லாட்சி அரசு: இருந்தென்ன, விட்டென்ன?

ஆட்சி மாற்றம் என்பது இந்த நாட்டு மக்களால் மகிழ்ச்சியாக-நம்பிக்கையுடன் தொடக்கி வைக்கப்பட்ட ஒன்று. மகிந்தவின் ஆட்சியில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள், குடும்ப ஆட்சி, சர்வாதிகாரம், வாழ்க்கைச் செலவீன அதிகரிப்பு மற்றும் இனவாதம் போன்றவற்றுக்கு மாற்றுத் தீர்வாகவே மக்கள் இந்த ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவந்தனர்.

ஆட்சி மாற்றத்தோடு மேற்படி எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிட்டிவிடும் என்ற நம்பிக்கை மக்களுக்கு ஏற்பட்டது. அந்த நம்பிக்கையை வலுப்படுத்தும் வகையிலேயே ஐக்கிய தேசிய கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றிணைந்து தேசிய அரசு ஒன்றை அமைத்தன.

நாட்டில் காணப்படும் முக்கியமான பல பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதற்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் தேவைப்படுகின்றது என்று கூறியே இந்த கட்சிகள் தேசிய அரசை உருவாக்கின.

தேசிய அரசு உருவாக்கப்பட்டு முதன் முதலில் செய்யப்பட நல்ல காரியம் 19ஆவது திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்டமைதான். அதனைத் தொடர்ந்து குறிப்பிடும் அளவுக்கு எந்தவொரு நல்ல பணியும் மேற்கொள்ளப்படவில்லை.
எதற்காகவெல்லாம் மக்கள் மகிந்தவின் அரசைக் கவிழ்த்தார்களோ அவை அனைத்தும் இந்த அரசில் இடம்பெறத் தொடங்கின.

பெரும்பான்மை இன மக்கள் மகிந்தவின்-ஆட்சியை வெறுப்பதற்கு காரணமாக அமைந்தவை வாழ்க்கைச் செலவீன அதிகரிப்பும் ஊழல்,மோசடியும்தான். இந்த இரண்டிலும் இருந்து நாடு விடுபட வேண்டும் என்று விரும்பியே இவர்கள் புதிய ஆட்சியை உருவாக்கினர்.

யுத்த காலத்தில் வாழ்க்கைச் செலவீனம் உச்சத்தில் இருந்தபோது யுத்தத்தை வெல்ல வேண்டும் என்பதற்காக மக்கள் இதைத் தாங்கிக்கொண்டிருந்தனர். யுத்தம் முடிந்ததும் நிலைமை சீராகிவிடும் என்று அவர்கள் நம்பினர். ஆனால்,யுத்தம் முடிந்து வாழ்க்கைச் செலவீனம் மேலும் அதிகரித்ததே தவிர குறையவில்லை.

யுத்தத்தை வென்றமைக்காக மக்கள் இவற்றையெல்லாம் அலட்டிக்கொள்ள மாட்டார்கள் என்று நினைத்து மகிந்த அரசு தான்தோன்றித்தனமாக செயற்படத் தொடங்கியது. ஊழல்,மோசடிகள் அதிகரிப்பதற்குக் காரணமாக இருந்தது.இந்த ஊழல்,மோசடிகள் அதிகரிக்க அதிகரிக்க வாழ்க்கைச் செலவீனமும் அதிகரித்தது.

இந்த நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்போவதாகக் கூறிக்கொண்டு ஆட்சியைக் கைப்பற்றிய நல்லாட்சி என்று கூறப்படுகின்ற இந்த அரசு வந்த வேகத்திகேயே அத்தியாவசிய பொருட்கள் சிலவற்றின் பொருட்களை குறைத்தது. அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்தது.

நல்லது என்று நடந்தது 19ஆவது திருத்தச் சட்டத்துடன் சேர்த்து அவ்வளவுதான். அடுத்து இடம்பெற்றதெல்லாம் மகிந்தவின் ஆட்சியில் இடம்பெற்ற செயல்களுக்கு ஒப்பான-மக்கள்விரோத செயற்பாடுகள்தான்.

### இங்கும் ஊழல். மோசடி

மகிந்தவின் ஆட்சி கவிழ்ந்து அடுத்த மாதத்திலேயே தேசிய அரசின் ஊழல் மோசடிகள் ஆரம்பமாகின. அதுதான் மத்திய வங்கி பிணைமுறி விவகாரம்.அதுதான் இன்றுவரை அரசுக்கு கலங்கத்தை ஏற்படுத்துவதாகவும் நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கான முக்கிய காரணமாகவும் இருந்து வருகின்றது.

வெளிநாட்டு முதலீடுகள் பல வராமல் போனதற்கும் ஏற்கனவே செய்யப்பட்டிருந்த வெளிநாட்டு முதலீடுகள் சில மீளப் பெறட்டமைக்கும் இந்த ஊழலே காரணமாக இருக்கின்றது.இந்த ஊழலால் நாட்டுக்கு ஒரு லட்சம் கோடி ரூபா வரை நட்டம் ஏற்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

ஊழலை ஒழிக்கப் போவதாகக் கூறிக்கொண்டு ஆட்சியைக் கைப்பற்றிய அரசு செய்த காரியம்தான் இது. இது மாத்திரமன்றி இத்தோடு இணைந்ததாக மேலும் பல ஊழல்கள் இடம்பெறத் தொடங்கின.

### வாழ்க்கைச் செலவீனம் அதிகரிப்பு

மகிந்தவின் ஆட்சியில் வாழ்க்கைச் செலவீனம் உச்சத்தில் இருந்தது. அது ரொக்கட் வேகத்தில் அதிகரித்துக்கொண்டு சென்றதே தவிர குறையவில்லை.இனியும் அது குறையாது என்று நம்பிய மக்கள் அதற்கான தீர்வாக மகிந்தவின் ஆட்சியை கவிழ்த்து புதிய ஆட்சியைக் கொண்டு வந்தனர்.

புதிய அரசோ வந்த வேகத்தில் 10 பொருட்களின் விலைகளைக் குறைத்தது. அது மக்களுக்கு நம்பிக்கையைக் கொடுத்தது. ஆனால், அடுத்து வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றி பெறுவதற்கான யுக்திதான் இது என்பதை அப்போது எவருக்கும் விளங்கி இருக்கவில்லை.

நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றதும் அரசு மகிந்த அரசுக்கு ஒப்பான அதன் சுயரூபத்தைக் காட்டத் தொடங்கியது. அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் கிடுகிடுவென அதிகரிக்கத் தொடங்கின.வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாகக் குறைக்கப்பட்ட பொருட்களின் விலைகள் பின்பு மெல்ல மெல்ல அதிகரிப்பது வாடிக்கையாகிவிட்டன.

### அரிசியிலும் ஊழல்

அதேபோல்,செயற்கை முறையில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டு அரிசி விலை அதிகரிக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டு முழுவதும் பாவிப்பதற்குப் போதுமான அளவு அரிசி கையிருப்பில் இருந்தும்கூட அரிசிக்கான தட்டுப்பாட்டை செயற்கையான முறையில் ஏற்படுத்தி அரசியின் விலையை அதிகரித்தனர் அரிசி மாபியாக்கள்.

இந்தத் தட்டுப்பட்டை காரணம் காட்டி விவசாயிகளை பாதிக்கும்வகையில் அரிசியை இறக்குமதி செய்தனர். இலங்கை மக்களின் பாவனைக்கு ஒத்துவராத அந்த அரிசியுடன் எமது நாட்டு அரசி கலக்கப்பட்டு இலங்கை அரிசி எனப் பொய் கூறி அந்த அரிசி விற்கப்பட்டது-விற்கப்படுகிறது.

இலங்கையின் அரிசிச் சந்தையைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் பொலநறுவையில் இயங்கும் மூன்று அரிசி ஆலை உரிமையாளர்களே இந்த ஊழலை புரிந்து வருகின்றனர் என்று தெரிந்தும்கூட அரசு இதற்கு எதிராக எதுவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அந்த மூன்று அரிசி ஆலை உரிமையாளர்களுல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோதரரும் ஒருவர். இவர்களின் இந்த மோசடி காரணமாகவே அரிசி விலைகள் அதிகரித்துள்ளன.

இவ்வாறு அரிசி போன்று மேலும் பல பொருட்களுக்கு செயற்கைத் தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டு அந்தப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதால்தான் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன.

### சிறுபான்மை இன மக்களுக்கு எதிரான இனவாதம்

அரசியலில் மக்கள் செல்வாக்கை இழந்த அரசியல்வாதிகள் மீண்டும் புத்துயிர் பெறுவதற்குக் கையில் எடுக்கும் ஆயுதம்தான் இனவாதம்.பெரும்பான்மை இன மக்களின் வாக்குகளைக் குறி வைத்து சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக இந்த இனவாதம் திருப்பிவிடப்படுகின்றது.

இதனால் ஏற்படுகின்ற பேரழிவுகளின் ஊடாக அந்த வங்குரோத்து அரசியல்வாதிகள் மீண்டும் ஆட்சி அதிகாரத்துக்கு வருகின்றனர்.

இந்த மோசமான இனவாத அரசியல் இலங்கையில் நீண்ட காலமாக இருந்து வருகின்றது.மகிந்தவின் ஆட்சியில் யுத்தத்தை அடிப்படையாக வைத்து தமிழ் மக்களுக்கு எதிரான பேரினவாதத்தைத் தூண்டி ஒருபுறம் அரசியல் செய்தனர்.மறுபுறம், முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதத்தைத் தூண்டியும் அரசியல் செய்தனர்.




யுத்த வெற்றியால் உருவான மகிந்தவின் ஆட்சி ஓரிரு வருடங்களில்ஆட்டங்காணத் தொடங்கியமைக்கு இந்த இனவாதப் போக்குதான் காரணம்.ஊழல்,மோசடி மற்றும் வாழ்க்கைச் செலவீன அதிகரிப்பு போன்ற காரணங்களால் மகிந்தவின் மக்கள் செல்வாக்கு மெல்ல மெல்ல சரியத் தொடங்கியது. அதைச் சரி செய்வதற்கு அவர் முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதத்தைக் கையில் எடுக்கத் தொடங்கினார்.

பொதுபலசேனா போன்ற பேரினவாத அமைப்புகள் தோற்றம் பெற்று முஸ்லிம்களின் வர்த்தகம்,கல்வி மற்றும் மார்க்க விடயங்கள் என அனைத்தின் மீதும் தாக்குதல் நடத்தின. இறுதியில் அழுத்கமவில் முஸ்லிம்களுக்கு எதிராக இனக்கலவரம் ஒன்று நிகழ்த்தப்பட்டு முஸ்லிம்களின் சொத்துக்களும் உயிர்களும் அழிக்கப்பட்டன.

இதன் பிறகு ஒன்றிணைந்த தமிழர்களும் முஸ்லிம்களும் மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்த்தனர்.அத்தோடு,முஸ்லிம்களுக்கு எதிரான பேரினவாதம் ஒளிந்துவிடும் என்று முஸ்லிம்கள் நினைத்தனர்.ஐக்கிய தேசிய கட்சியின் பங்களிப்புடன் உருவாகும் அரசு முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் பாதுகாப்பாக இருக்கும் என்று நம்பினர்.ஆனால்,ஆட்சி மலர்ந்து ஓரிரு மாதங்களிலேயே அந்த நம்பிக்கை சிதைந்து போனது.

மகிந்தவின் ஆட்சியில் முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதத்தைத் தூண்டிவிட்ட பொதுபலசேனா இந்த ஆட்சியிலும் தலை தூக்கியது.பொதுபலசேனா-மாத்திரமன்றி இன்னும் பல அமைப்புகளும் உருவாகி முஸ்லிம்களுக்கு எதிராகக் களத்தில் குதித்தன. முஸ்லிம்கள் அதிகமாக செறிந்து வாழும் கிழக்கு மாகாணம் வரை பேரினவாத செயற்பாடுகள் விஸ்தரிக்கப்பட்டன.

எந்தவோர் இனவாத செயற்பாட்டையும் எந்தவோர் இனவாத அமைப்பையும் கட்டுப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் மகிந்தவின் ஆட்சியில் இடம்பெற்ற அழுத்கமை கலவரம் போன்றதொரு கலவரம் காலி கிந்தோட்டையில் இடம்பெற்றது.

முஸ்லிம்களின் வீடுகளும் சொத்துக்களும் தீ வைக்கப்பட்டு கோடிக்கணக்கான ரூபா நட்டம் ஏற்படுத்தப்பட்டது.

தமிழ்-முஸ்லிம் மக்களை பொறுத்தவரை பெரும்பான்மை இன அரசுகள் எல்லாமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான்.ஆட்சியைப் பிடிப்பதற்காக மாத்திரம் சிறுபான்மை இன மக்கள் மீது அக்கறைபோல் காட்டுவதிலும் ஆட்சியைக் கைப்பற்றியதும் தங்களின் சுயரூபத்தைக் காட்டுவதிலும் இருந்து இந்த அரசுகூட வேறுபடவில்லை.

மகிந்த காட்டிய அதே அலட்சியப் போக்கையே இந்த அரசும் காட்டியது. இதனால் இந்த அரசையும் தமிழ்-முஸ்லிம் மக்கள் வெறுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு இந்த அரசின் மக்கள் விரோதப் போக்கை அடுக்கிக்கொண்டே போகலாம்.இவர்கள் தேசிய அரசை உருவாக்கி எதையும் சாதிக்கவில்லை.
எந்தவொரு சாதகமான மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. இந்த நிலையில்தான் ஐக்கிய தேசிய கட்சி மற்றும் சுதந்திரக் கட்சிக்கு இடையிலான தேசிய அரசு ஒப்பந்தம் கடந்த வருடம் டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்தது.

இந்த ஒப்பந்தம் இத்தோடு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு தேசிய அரசு கலைக்கப்பட வேண்டும் என்றும் இந்த ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டு 2020 வரை தேசிய அரசு தொடர வேண்டும் என்றும் இரண்டு வெவ்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

உண்மையில், இந்தத் தேசிய அரசு இருந்தாலும் ஒன்றுதான் தனி அரசு இருந்தாலும் ஒன்றுதான் என்பதுதான் மக்களின் நிலைப்பாடாகும்.தேசிய அரசு உருவானதால் எந்தவொரு நன்மையையும் மக்கள் அடையவில்லை. மகிந்தவின் வளர்ச்சியைத் தடுக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காகவே இந்தத் தேசிய அரசு உருவாக்கப்பட்டதே தவிர இந்த நாட்டு மக்களின் நலன்களுக்காக அல்ல.

ஆகவே,தேசிய அரசு இருந்தாலும் ஒன்றுதான் தனி அரசு இருந்தாலும் ஒன்றுதான். அது மட்டுமன்றி இந்த நாட்டை யார் ஆண்டாளும் ஒன்றுதான் என்றவிரக்தி மனநிலையுடன்தான் இந்த நாட்டு மக்கள் இப்போது காணப்படுகின்றனர்.

காவியன்




# விகாரையில் சடலம் மீட்பு

கொழும்பு, ஜன.28

சப்புகஸ்கந்த ஹெய்யன்துடுவ பௌத்த விகாரையிலிருந்து இளைஞர் ஒருவரின் சடலம் நேற்றையதினம் மீட்கப்பட்டுள்ளது.

30 வயதுடைய இளைஞரின் சடலமே இவ்வாறு மீட்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில்பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அவர் விகாரை வாசலில் தற்கொலை செய்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. (அ)



# 17 பிடியாணை நபர் மட்டக்களப்பில் கைது

கொழும்பு, ஜன.28

நாட்டின் பல நீதிமன்றங்களினால் 17 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டு, கைது செய்யப்படாத நிலையில் தலைமறைவாகியிருந்த நபரொருவர் கைது செய்யப் பட்டுள்ளார் என மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அக்கரைப்பற்று - அட்டாளைச்சேனைப் பகுதியைச் சேர்ந்த நபரே மட்டக்களப்பில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மட்டக்களப்பு - புளியடிகுடா பகுதியில் சந்தேகப்படும் வகையில் நடமாடிய சந்தேகநபர் ஒருவர் கடந்த வியாழக்கிமை மாலை கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட நபரிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது அவர் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் 17 குற்றச் செயலுடன் தொடர்புடையதாக 17 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டு தேடப்பட்டு வரும் நபரெனத் தெரிய வந்துள்ளது. இதனையடுத்து சந்தேகநபர் நேற்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் நீதிபதி எம்.கணேசராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 08ஆம் திகதி வரையில் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் தொடர்பான தகவல்கள் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# தேசியக் கொடியை பறக்க விடுங்கள்

கொழும்பு, ஜன.28

இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் முகமாக எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை அனைத்து அலுவலகங்கள், வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களிலும் தேசியக் கொடியை ஏற்றி வைக்குமாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

"இம்முறை சுதந்திர தின நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் இடம்பெறவுள்ளதாகவும், இதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பங்கேற்பார் என்றும், விசேட அதிதியாகப் பிரிட்டன் அரச குடும்பத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் எலிசபத் மகாராணியின் இளைய மகன் இளவரசர் எட்வர்ட் கலந்து கொள்ளவுள்ளார்" என்றும் அவர் கூறினார். (அ)

# மாணவர் படுகொலைக்கு நீதி கோரி புதிய நடவடிக்கை

கொழும்பு, ஜன.28

திருகோணமலையில் கடந்த 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டமைக்கு நீதி கோரி சர்வதேச மன்னிப்புச் சபை புதிய பிரசாரமொன்றை முன்னெடுத்துள்ளது.

இரண்டு பொலிஸ் குழுக்களும், ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றும் இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்தபோதும், இந்தச் சம்பவம் தொடர்பில் எவருக்கு எதிராகவும் வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை.

இந்த நிலையில், புதிய கோரிக்கைக் கடிதமொன்றில் கைச்சாத்திடும் பணிகளை ஆரம்பித்துள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. இந்தப் படுகொலை தொடர்பில் இலங்கை அரசாங்கம் ஆக்கபூர்வமான விசாரணைகளை மேற்கொண்டு, சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக வழக்கு தொடர வேண்டும்.

இதனூடாக குறித்த மாணவர்களின் குடும்பங்கள் இறுதியில் நீதியைப் பெறலாம் என்று சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது. (அ)

# கூட்டமைப்பின் மாபெரும் கூட்டம்








கிளிநொச்சி, ஜன.28

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டம் கிளிநொச்சியில் நேற்று மாலை நடைபெற்றது. எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி. சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், மாகாண சபை உறுப்பினகளான பசுபதிப்பிள்ளை, குருகுலராஜா, அரியரத்தினம் ஆகியோருடன் வேட்பாளர்கள், மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டர். (அ)

# சந்தோஷமா வாழ எது நல்லதெண்டதை மட்டும் பாருங்கோ

தை பிறந்தால் வழி பிறக்கும். எண்டுதானே எங்கடை பழைய ஆக்கள் சொல்லி வைச்சிருக்கினம். ஆனபடியால் தைத் துவக்கத்தோடை எல்லா நல்ல காரியங்களையும் செய்யத் துவங்கி விடுவினம். அதிலை கலியாணங்கள் தான் தடல்புடலாக நடக்கும். எனக்கும் கனபேர் வந்து சொல்லுவினம். சில வேளை ஒரே நாளிலை இரண்டு கலியாணங்கள் எண்டால் ஒரு கலியாண வீட்டை தாலி கட்டேக்கை போய் நிண்டிட்டு மற்றக் கலியாண வீட்டைச் சாப்பாட்டுக்குப் போவன். முதலியும் அப்பிடித்தான் வருவான். ஆனால் அவன் ஒண்டு சமையல் ஆர் எண்டு பாத்துத்தான் எங்கை தாலி கட்டுப் பாக்கிறது? எங்கை சாப்பாட்டுக்குப் போறது எண்டு முடிவெடுத்து எனக்கும் சொல்லுவன். அதின்படி போனால் இரண்டும் நல்லா இருக்கும். தாலி கட்டுப் பாக்கேக்கை தாற சோடாவும், பலகாரமும் சாப்பிடப் போகேக்கை செமிச்சுப்போம். பிறகு சாப்பாட்டுக்குப் போயிருந்தால் வடிவா ஒரு பிடி பிடிச்சுப் போட்டு வரலாம்.

உப்பிடி யோசிச்சுக் கொண்டு நேந்றைக்கு ஒரு கலியாணத்துக்குப் போனன். மண்டபத்திலைதான் கலியாணம். ஆக்கள் பிழையில்லை. செல்வாக்குள்ள சனம். ஆனால் மண்டபத்திலை போய் பாத்தால் ஆக்களைக் காணேல்லை. தாச்சி விளையாடக் கன்னை பிரிச்சு நிண்ட மாதிரித்தான் சனம் இரண்டு பிரிவா நிண்டினம். ஒரு பகுதிக்குச் சோடா குடுத்தினம். மற்றப் பகுதி அதை வேண்டாம் எண்டு சொல்லிப் போட்டினம். அவை ஒண்டும் குடிக்கவும் இல்லை, எடுக்கவும் இல்லை. இதை என்னெண்டு அறிய வேணும்போலை கிடந்தது. நானும் முதலியும் ஆளை ஆள் பாத்து முழுசிக் கொண்டிருந்தம். நாங்கள் எங்கடை ஆக்களுக்கை போய் இருந்தம். அவை மாப்பிளை பகுதி. பெண் வீட்டார் இருந்த பகுதியிலை கொஞ்சப்பேர் தான். பாத்தால் எங்களோடை படிச்ச தம்பித்துரை வந்து எங்களைப் பாத்துச் சிரிச்சுப் போட்டுப்போய்ப் பெண் வீட்டாரோடை இருந்தான்

உடனை முதலி காதுக்கை கிசு, கிசுத்தான். கலப்புச் சம்பந்தம் இது எண்ட விசியம் விளங்கிப் போச்சுது. பெட்டை பக்கம் குறைவெண்டாதாலை தான் இந்தக் கோலம் கொண்டிருக்கினம் எங்கடை ஆக்கள். தாலி கட்டின உடனை இவை சாப்பிடவும் இல்லை. எழும்பிப்போட்டினம். அப்ப தான் பாத்தன் இவ்வளவு நடந்த பிறகும் சனம் திருந்தேல்லை எண்டு.

அப்ப உப்பிடி ஏற்றத் தாழ்வு பாக்கிற சனம் ஷெல் அடி விழேக்கை அதைப் பாத்திருக்க வேணும். அமளிச்சண்டைக்குள்ளை உதைப் பாத்திருக்க வேணும். இந்தியன் ஆமியும், சிங்கள ஆமியும் கலைச்சுக் கலைஞ்சு அடிக்கேக்கை உப்பிடிப் பாத்துக் கன்னை பிரிச்சு நிண்டு வீடுகளுக்கை ஒழிச்சிருந்திருக்க வேணும். இடம் பெயர்விலை உப்பிடிப்பாத்திருந்தால் இப்ப பாக்கிறதைச் சரி எண்டு சொல்லுவன். அப்ப உதொண்டையும் பாக்காதவை இப்ப பாக்கிறது தங்களுக்கு அப்பிடி ஒரு தேவையும் இப்ப இல்லை எண்ட படியால் தானே?

எத்தினை வருசத்துக்கு முன்னமே சொல்லிப் போட்டினம் "சாதி இரண்டொழிய வேறில்லை" அதிலை ஒண்டு ஆண் சாதி மற்றது பெண்சாதி. அதுதானே உண்மை. அதைவிட்டிட்டு இன்னும் நாங்கள் டச்சுக் காலத்தைப் பற்றிக் கதைச்சுக் கொண்டிருக்கிறம்.

சம்பந்தம் செய்யேக்கை ஒண்டை மட்டும் பாருங்கோ. அவை உங்களோடை ஒத்தோடுற சனமோ எண்டு. மற்றது ஒராளை மற்றாள் குழப்பாதவையாளா இருக்க வேணும் எண்டு. அதோடை குடும்பங்களையும் குழப்பக்கூடாதெண்டதையும் பாத்துக் கொள்ள வேணும்.

ஆர் பக்கத்திலை இருக்கிறானோ, அவன் தான் உங்களுக்கு உறவு. தற்செயலா நீங்கள் தடக்கி விழுந்தால் ஆர் கையைப் பிடிச்சுத் தூக்குவனோ அவன் தான் உங்கடை உறவு. விழுந்தால் உங்கடை உங்கடை பிள்ளையள் கனடாவிலையும், அவுஸ்ரேலியாவிலையும் இருந்து தூக்கிவிட வராயினம். விழுந்து முறிஞ்சாப் பிறகு வருவினம். இல்லாட்டி கடன் செய்ய உண்டியலிலை காசு வரும். ஆனபடியால் யோசிச்சுச் செய்யுங்கோ பிள்ளையள். குறையக் கூட எண்டு எதையும் பாக்காதையுங்கோ. சந்தோஷமா வாழ எது நல்லதெண்டதை மட்டும் பாருங்கோ. நான் வாறன்.

**வில்லங்கம் விநாசி**

# புலிகளை ஏற்றால் தடையை நீக்குங்கள்

## அங்கஜனுக்கு சீ.வீ.கே. சவால்



யாழ்ப்பாணம், ஜன. 28

விடுதலைப் புலிகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சி ஏற்றுள்ளது என அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கூறுகிறார். அப்படியாயின் விடுதலைப் புலிகள் மீதான தடையையும், அரசியல் கைதிகளின் விடுதலையையும், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு நீதியையும் ஜனாதிபதியிடம் பேசி பெற்றுத் தர வேண்டும்.

வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் இப்படி அங்கஜன் இராமநாதனுக்கு சவால் விடுத்திருக்கிறார்.

விடுதலைப் புலிகள் தொடர்பாக சீ.வீ.கே. சிவஞானத்தின் கருத்துக்குப் பதிலளித்த அங்கஜன் இராாமநாதன் விடுதலைப் புலிகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சி ஏற்கிறது எனக் கூறியிருந்தார். இதற்குப் பதிலடியாகவே சீ.வீ.கே. சிவஞானம் மேலேகூறப்பட்ட 3 விடயங்களை சவாலாக முன்வைத்துள்ளார்.


நேற்று ஊடகவியலாளர்கள் சீ.வீ.கே. சிவஞானத்தை சந்தித்து கேள்விகளை எழுப்பியிருந்தனர். இதற்குப் பதிலளித்த அவர் மேலும் கூறுகையில்:

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யாழில் தமிழ்க் கட்சியாக அனுமதிக்கப் பட்டுள்ளதாக அங்கஜன் கூறுகிறார். ஆனால் அவர் கூறுவது போன்று செயற்பட ஜனாதிபதி அனுமதித்துள்ளாரா? என்பதை ஜனாதிபதி மூலம் வெளிப்படுத்த வேண்டும். இல்லையெனில் அது அங்கஜனின் கருத்தாகி விடும்.

அங்கஜனுக்கு கட்சியில் செல்வாக்கு உள்ளது என்பதை ஏற்கிறேன். ஆகவே ஒரு விடயத்தை அவரிடம் கேட்க விரும்புகிறேன். அவரின் கட்சியில் புலிகளின் பாடலை பயன்படுத்தலாம். அதை நாங்களும் வரவேற்கிறோம். அப்படியானால் புலிகளை ஏன் இன்னமும் தடை செய்த அமைப்பாக வைத்திருக்க வேண்டும். புலிகள் என்ற போர்வையில் இரண்டு தசாப்தமாக சிறை வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை பொது மன்னிப்பு அல்லது ஏதோவொரு அடிப்படையில் விடுவிக்க வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் அரசிடம்தானே சரணடைந்தார்கள். புலிகளை இப்போது நீங்களும் அங்கீகரித்து இருக்கிறீர்கள். புலிகள் நியாயத்துக்காக - உரிமைக்காகப் போராடினார்கள் எனச் சொல்லும் அங்கஜன் அவரின் கட்சியின் தலைவரான ஜனாதிபதியுடன் பேசி இந்த மூன்றையும் நிறைவேற்ற வேண்டும் - என்றார். (ச)

# கேலிச்சித்திரம்




# நீர் வழங்கல் திணைக்களத்தினர் பணிப் புறக்கணிப்புக்கு முடிவு




கொழும்பு, ஜன. 28

பெப்ரவரி மாதத்தின் முதல் வாரத்தில், நாடளாவிய ரீதியில் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக நீர் வழங்கல், வடிகாலமைப்பு தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த கூட்டமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

2018ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சம்பள முறைமையை இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என அந்தக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் உபாலி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த விடயத்தில் நிர்வாகிகள் தொடர்ந்தும் அசமந்தப் போக்கை கடைப்பிடித்து வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.


இந்த நிலையில், குறித்து சம்பள நடைமுறையை நடைமுறைப்படுத்த மேலும் தாமதம் ஏற்படுத்தினால் பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்க உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

மேல் மாகாணத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நான்கு மணிநேர அடையாள பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்க உள்ளதாக உபாலி ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ச)

# புதிய அரசியலமைப்பை ஏற்றால் தமிழர் வாழும் உரிமை இழப்பர்

யாழ்ப்பாணம், ஜன. 28

பிரித்தானியாவிடமிருந்து இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த பின் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்புகளை தமிழ்த் தரப்பு நிராகரித்திருந்தது. ஆனால் அவற்றிலும் பார்க்க மோசமான அரசியல் யாப்பை தமிழ்த் தரப்புகள் ஏற்றுக்கொள்ள முன்வந்திருப்பது இந்தத் தீவிலே தமிழர்களை வாழ்வுரிமை அற்றவர்களாக ஆக்கும் என எச்சரித்திருக்கிறார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன்.



எமது தேசியத் தலைவரால் விடுதலைப் போராட்டம் எவ்வாறு உன்னத போராட்டமாக கட்டி எழுப்பப்பட்டதோ அந்த வழியில் எமது அரசியல் போராட்டத்தையும் உன்னதமான நேர்மையான அரசியல் கலாசாரமாக கட்டியெழுப்புவோம் என்றும் அவர் கூறினார்.

அரியாலை கலைமகள் சனசமூக நிலையத்தில் நேற்று நடத்திய மக்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"நாங்கள் ஒரு பக்கத்திலே தேசிய விடுதலை மறுபக்கத்திலே சாதி, மத வேறுபாடற்ற சமத்துவமான ஊழலற்ற நிர்வாகத்தை கட்டியெழுப்பி இந்த தேசத்தை ஒரு உன்னதமான தேசமாக நாங்கள் மாற்றுவோம். அபிவிருத்தி அடைந்து வருகின்ற மூன்றாம் உலக நாடுகளிலே அரசியல் என்பது ஒரு சாக்கடையாக இருக்கின்றது.

நாங்கள் ஒரு வித்தியாசமான புனிதமான, ஒரு நேர்மையான அரசியலைக் கட்டி எழுப்ப விரும்புகின்றோம். எமது ஆயுதப் போாரட்டம் உலக ஆயுதப் போராட்டங்களில் எவ்வாறு உன்னதமான ஆயுதப் போராட்டமாக எமது தேசியத் தலைவரால் கட்டியெழுப்பப்பட்டதோ அதே போல அரசியலில் ஒரு உன்ன தமான அரசியல் போராட் டத்தை நடத்திக்காட்டுவோம்.

1947, 1972, 1978 ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்புகளை தமிழ்த் தரப்புகள் எவையும் ஏற்றுக் கொள்ளவில்லை. இம்முறைதான் ஒரு ஒற்றையாட்சி அரசியல் யாப்பை தமிழ்த் தலைவர்கள் முதல் முறையாக ஆதரித்திருக்கிறார்கள். இது அந்த உள்ளூராட்சித் தேர்தலின் பின் பொதுமக்களின் வாக்கெடுப்பிற்கு வரப்போகின்றது. இது வருகின்றபோது தமிழர்கள் இந்தத் தீவிலே வாழ்வுரிமை அற்றவர்களாக ஆக்கப்படுவார்கள்" - என்றார். (ச)

## தொடர்ச்சிகள்

### சவாலுக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் விவாதிக்க பெப்ரவரி 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான , கடிதத்தை எதிர்வரும் திங்கட்கிழமை அனுப்பிவைக்க உள்ளதாகச் சபாநாயகரிடம் கூறினேன். அவரும் அதனை ஏற்றுக் கொண்டார். எங்களில் எந்தத் தவறுமில்லை என்பதை இந்த விவாதத்தின் போது விளக்குவோம்" என அவர் தெரிவித்தார்.

குறித்த இரண்டு அறிக்கைகள் தொடர்பில் முடிந்தால், எதிர்வரும் 10 ஆம் திகதி தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்துமாறு ஜனாதிபதி அண்மையில் சவால்விடுத்திருந்தார்.

இந்த நிலையில், நேற்றைய தினம் பிரதமர் ரணில் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். (அ)

### வேட்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாவகச்சேரியில் நேற்று முன்தினமிரவு பிரசாரத்தில் ஈடுபட்டோரை மோட்டார் சைக்கிள், ஜீப் வண்டியில் வந்த இனந் தெரியாத குழுவே விரட்டி விரட்டித் தாக்குதல் நடத்தியுள்ளது. இந்தத் தாக்குதலில் வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் என மூவருக்கு சிறுகாயங்கள் ஏற்பட்டன எனக் கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச)

### அரசாங்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயார் எனக் கூறியுள் ளனர். புதிய கட்சி அமைக்கும் முயற்சியை விட்டு ஒன்றிணைய அனைவரும் முன்வர வேண்டும் என்றும் அழைப்பு விடுத்திருக்கிறார் ஜனாதிபதி.

நேற்று இரத்தினபுரியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கன் விமான சேவை, மிகின் லங்கா விமான சேவையில் இடம்பெற்ற ஊழல் மோசடி குறித்துக் கண்டறிய புதிய ஆணைக்குழு அடுத்த வாரம் அமைக்கப்படும் என்றும் அவர் இதன்போது தெரிவித்தார். (ச)

### சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைதானம் அமைக்கும் பணிகள் மூன்று ஆண்டுகளில் நிறைவுறும். மண்டைதீவு, வடக்கின் விளையாட்டு நகரமாகத் திகழும். சர்வதேச கிரிக்கெட் மைதானத்துடன் உடற்பயிற்சி மையம், நீச்சல் தடாகம் என்பனவும் அமையவுள்ளன. உதைபந்தாட்டம், ரக்பி, கூடைப்பந்தாட்டம் என்பவற்றை நடத்துவதற்கான வசதிகளுடன் சர்வதேச வீரர்கள் தங்கக்கூடிய ஹோட்டலும் அமைக்கப்படும் எனக் குழுவினர் தெரிவித்தனர். (ச)


### இராணுவத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் இராணுவத்தினரின் பல செயற்பாடுகள் தொடர்பில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இலங்கை வந்த குழுவிடம் சுட்டிக் காட்டியிருந்தார். வடக்கில் ஏ- 9 வீதியில் இராணுவத்தினர் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதும், ஹோட்டல்கள், மக்களின் காணியில் பயிர் செய்கை என்பன தவறானவை என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவம் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் முதல் தடவையாக இப்படியான பரிந்துரை ஒன்றை முன்வைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# கலாம் நினைவகத்தைப் பார்வையிட அனுமதி



இராமேஸ்வரம், ஜன.28

தமிழகத்தின், இராமேஸ்வரம் அருகே அமைந்துள்ள அணு விஞ்ஞானி அப்துல் கலாமின் தேசிய நினைவகத்தை பார்வையாளர்கள் முழுமையாகப் பார்வையிட குடியரசு தினத்திலிருந்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அப்துல் கலாமின் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில், அவரது நினைவாக இந்திய மத்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (டி.ஆர்.டி.ஓ) சார்பில் 'அப்துல் கலாம் தேசிய நினைவகம்' அமைக்கப்பட்டு கலாமின் 2 ஆம் ஆண்டு நினைவு தினமான கடந்த ஜூலை 27 இல் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி திறந்துவைத்தார்.

கலாம் நினைவகத்தின் நுழைவுப் பகுதியில் கலாம் வீணை வாசித்தபடி அமர்ந்திருக்கும் வெண்கலச் சிலை, கலாம் பயன்படுத்திய பொருட்கள், நூல்கள், உடைகள், கலாமின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் ஓவியங்கள், கலாமின் பல்வேறு கால கட்டப் புகைப்படங்களும் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் நான்கு காட்சிக் கூடங்களின் பணிகள் முடியாததால், இந்த நினைவகத்தை முழுமையாகப் பார்வையிட பொது மக்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் அப்துல் கலாம் தேசிய நினைவகத்தில் இந்தியாவின் 69 ஆவது குடியரசு தினம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது. இதன் பின்னர், பொது மக்கள் கலாம் நினைவகத்தை முழுமையாக பார்வையிட அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

# 18 லட்சம் பேருக்கு அமெரிக்கக் குடியுரிமை



வோஷிங்டன், ஜன.28

அமெரிக்காவில் சட்டவிரோதமாக வசிக்கும் 18 இலட்சம் பேருக்கு குடியுரிமை வழங்க அந்த நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார்.

அமெரிக்காவில் சுமார் 20 லட்சத்துக்கும் மேற்பட்ட வெளிநாட்டினர் சட்டவிரோதமாக தங்கியிருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அவர்களில் குழந்தையாக இருக்கும்போது பெற்றோரால் அழைத்து வரப்பட்டவர்களுக்கு முன்னாள் ஜனாதிபதி ஒபாமா தற்காலிக தங்கும் உரிமையை வழங்கினார். இந்தத்திட்டத்தில் 7 இலட்சத்துக்கும் மேற்பட்ட வெளிநாட்டினர் பதிவு செய்தனர்.

அவர்களுக்கான தற்காலிக தங்கும் உரிமை மார்ச் மாதத்துடன் நிறைவடையவுள்ளது. அதன்பிறகு அவர்களை நாட்டைவிட்டு வெளியேற்ற ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் திட்டமிட்டிருந்தார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்க நாடாளுமன்றத்தின் செனட் சபையில் செலவு அனுமதிப் பிரேரணையினை எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியினர் தோற்கடித்தனர். இதனால் 3 நாட்கள் அரசு நிர்வாகம் முடங்கியது. அதன் பின்னர் குடியேற்றவாசிகளுக்கு பாதகமாக செயற்பட மாட்டோம் என்று அரசு அளித்த வாக்குறுதியை ஏற்று பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இந்நிலையில் டொனால்ட் ட்ரம்ப் "அமெரிக்காவில் சட்டவிரோதமாக வசிக்கும் வெளிநாட்டினருக்கு குடியுரிமை வழங்குவதற்கு விரிவான திட்டம் விரைவில் வெளியிடப்படும். அமெரிக்காவில் சட்டவிரோதமாக வசிக்கும் 18 இலட்சம் வெளிநாட்டினருக்கு குடியரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கு 10 ஆண்டுகள் முதல் 12 ஆண்டுகள் வரை ஆகலாம். அதேநேரம் ஆண்டுதோறும் 50,000 பேருக்கு 'கிரீன் கார்ட்' எனப்படும் நிரந்தரமாகத் தங்கி வேலை செய்வதற்கான அனுமதித் திட்டம் இரத்துச் செய்யப்படும்" என்று தெரிவித்தார். (அ)

# ஆற்றுக்குள் பஸ்: 13 பேர் மாண்டனர்



மகாராஷ்டிரா, ஜன.28

மகாராஷ்டிர மாநிலத்தில் கோயிலுக்கு சென்ற பக்தர்கள் பயணம் செய்த பஸ் ஒன்று, ஆற்றுக்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் 13 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

மகாராஷ்டிராவில் கோலாப்பூர் அருகே உள்ள கோயில்களுக்கு பஸ் ஒன்றில் மூன்று குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் சென்றனர். அங்குள்ள விநாயகர் கோயிலில் வழிபாடு நடத்திய அவர்கள் வெள்ளிக்கிழமை இரவு வீடு திரும்பிக் கொண்டு இருந்தனர்.

அப்போது, பஞ்சகங்கா ஆற்றுப் பாலத்தில் பஸ் சென்று கொண்டிருந்தபோது, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்தது. பயணிகளுடன் பஸ் ஆற்றுக்குள் விழுந்தது. இதில் பஸ்ஸில் பயணம் செய்தவர்களில் 13 பேர் நீரில் மூழ்கிப் பரிதாபமாக உயிரிழந்தனர்.

தீயணைப்பு வீரர்களும், பொலிஸாரும் விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். விபத்தில் சிக்கிய 3 பேர் காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டனர். (அ)

# பங்கேற்கோம்!

## சிரிய எதிர்க்கட்சிகள் பிழவாதம்

மொஸ்கோ, ஜன.28

அடுத்தவாரம் ரஷ்யா மேற்கொள்ளும் அமைதி மாநாட்டில் பங்கேற்கப்போவதில்லை என்று சிரிய எதிர்க்கட்சித் தரப்பு தெரிவித்துள்ளது.

ஐ.நா. சபையின் முயற்சியின்பேரில் ஒஸ்திரியா நாட்டின் வியன்னா நகரில் ஜனாதிபதி ஆசாத், எதிர்க்கட்சிகள் இடையிலான 2 நாள் அமைதிப் பேச்சுவார்த்தை கடந்த 25 ஆம் திகதி நடந்தது.

இந்த நிலையில் ரஷ்யா மேற்கொள்ளவிருக்கும் அமைதி பேச்சுவார்த்தை குறித்து சிரிய எதிர்க்கட்சிகள் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் கூறும்போது, "அடுத்தவாரம் ரஷ்யா மேற்கொள்ளவிருக்கும் அமைதிப் பேச்சுவார்த்தையை புறக்கணிக்கிறோம். வியன்னாவில் நடந்த அமைதிப் பேச்சுவார்த்தையில் அனைத்துச் சுற்றும் முக்கியத்துவம் வாய்ந்தவை. ஆனால் அதற்கான விளைவை நாங்கள் பார்க்கவில்லை. ஐ. நாவின் அமைதிக் குழு, சிரிய அரசின் கூட்டாளியாக உள்ளது" என்றார். (அ)



# நெதர்லாந்தில் சூடு ஒருவர் உயிரிழப்பு

நெதர்லாந்து, ஜன.28

நெதர்லாந்தில் மர்ம நபர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியாகியிருப்பதாகவும், பலர் படுகாயமடைந்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நெதர்லாந்தின் 'க்ரோட் விட்டன்பேர்ஜஸ்றட்' பகுதியில் திடீரென்று மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் குறைந்த பட்சம் ஒருவர் பலியாகியிருக்கலாம் எனவும் இரண்டு பேர் காயமடைந்திருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

துப்பாக்கிச் சூட்டை நடத்திய நபர் குறித்தோ, தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்களோ இன்னும் வெளியிடப்படவில்லை. சம்பவம் நிகழ்ந்த இடத்தைப் பொலிஸார் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். (அ)

# தனியே தன்னந்தனியே...!



ரொரண்டோ, ஜன.28

கனடாவில் தனித்தீவு ஒன்றில் மிதக்கும் கோட்டையை அமைத்து, வயதான தம்பதியினர் 25 ஆண்டுகளாக வாழ்ந்து வருவது பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. கனடா நாட்டைச் சேர்ந்த தம்பதியரான, ஓவியர் வெய்ன் ஆடம்ஸூம், இசை, நடனம், இலக்கியம் என்பவற்றில் ஆளுமை கொண்ட கேத்ரின் கிங்கும் வான்கோவர் கடற்கரைப் பகுதியில் உள்ள தீவின் மையப்பகுதியில், 1992ஆம் ஆண்டிலிருந்து மிதக்கும் கோட்டையில் வசித்து வருகின்றனர்.

முதலில் இந்தக் கோட்டை சாதாரணமாகதான் அமைக்கப்பட்டது. அதன் பின்னர் தம்பதியர் அங்கேயே வசிக்க முடிவெடுத்ததால், இருவரும் இணைந்து கோட்டையை தங்கள் வசதிக்கு ஏற்ப மாற்றி அமைத்தனர்.

இந்தத் தீவில் எவ்வளவு தண்ணீர் வந்தாலும், அதற்கு ஏற்றற் போல கோட்டையானது உயர்த்தியும், தாழ்த்தியும் தானாக அமைத்துக் கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. தங்களைக் காண வரும் விருந்தினர்களை உபசரிக்க, விருந்தினர் கூடாரம் ஒன்றையும் , பசுமை வீடு, நடன அரங்கம், கலைக்கூடம், விருந்தினர்களுக்கான கலங்கரை விளக்கக் கோபுரம் என்பவற்றையும் இந்தத் தம்பதியர் அமைத்துள்ளனர்.

இந்த கோட்டையைச் சுற்றிலும் 14 சூரிய விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதால், இரவில்எப்போதும் கோட்டை ஒளிர்ந்து கொண்டே இருக்கும். இவர்களுக்குத் துணையாக இந்த கோட்டையில் நாய்கள் உள்ளன. ஆனால், எந்த ஒரு தகவல் தொடர்பு சாதனமும் இவர்களிடம் இல்லை. இந்தத் தம்பதியினர், உணவுக்காக அரை ஏக்கர் நிலத்தில் பயிரிட்டுக் கொள்கிறார்கள். இருவரும் படகில் சென்று மீன்களை பிடித்து வந்து சமைக்கின்றனர். மழை பெய்யும் பொழுது அதனை சேமித்து வைத்து, குடிநீராகப் பயன்படுத்துகின்றனர்.

எப்போதும் மிதந்து கொண்டிருக்கும் இந்த கோட்டைக்கு, கோடை காலத்தில் இந்த தம்பதியினரின் நண்பர்களும், உல்லாசப்பயணிகளும் வருகை தருகின்றனர்.

தங்களின் மரணம் வரை இங்கேயே வசிக்க வேண்டும் என்பதே, இவர்களின் ஆசை. (அ)

# இறுதியில் சாதித்தது இலங்கை




டாக்கா, ஜன.28

இலங்கை, சிம்பாப்வே, பங்களாதேஷ் ஆகிய அணிகள் மோதிய முத்தரப்பு கிரிக்கட் தொடரில் இலங்கை அணி கிண்ணத்தைத் தனதாக்கியது.

தொடரின் இறுதிப் போட்டியில் இலங்கை - பங்களாதேஷ் அணிகள் நேற்றுப் பலப்பரீட்சை நடத்தின.

நாணயச் சுழற்சியில் இலங்கை அணி வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இலங்கை அணி சார்பாக அதிக பட்சமாக உபுல் தரங்க 56 ஓட்டங்களையும் ,தினேஷ் சந்திமால் 45 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் பங்களாதேஷ் அணி சார்பாக றொபெல் ஹஸைன் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

கிண்ணத்தைக் கைப்பற்ற பங்களாதேஷ் அணிக்கு 222 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கு வழங்கப்பட்டது.

வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய பங்களாதேஷ் அணி 41.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 142 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியைத் தழுவியது.

இந்தப் போட்டியில் அறிமுக வீரராகக் களமிறங்கிய இலங்கை அணியின் மதுசங்க , 3 விக்கெட்டுக்களை தொடர்ச்சியாகச் சாய்த்து 'ஹட் ரிக்' சாதனை படைத்தார்.

ஆட்ட நாயகனாக உபுல் தரங்கவும், தொடர் நாயகனாக திஸர பெரேராவும் தெரிவாகினர். (அ)

## வோஸ்னியாக்கி சம்பியன்

மெல்பேர்ன், ஜன.28

அவுஸ்ரேலியா பகிரங்க டென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் ஹலெப்பை வீழ்த்தி வோஸ்னியாக்கி சம்பியன் பட்டத்தைத் தட்டிச்சென்றார்.

அவுஸ்ரேலியா பகிரங்க டென்னிஸ் தொடர் மெல்போர்ன் நகரில் நடைபெற்று வருகிறது.

இந்தத்தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் முதல் நிலை வீராங்கனையான சிமோனா ஹலெப்பும், இரண்டாம் நிலை வீராங்கனையான கரோலின் வோஸ்னியாக்கியும் மோதினர்.

இந்தப்போட்டியின் முதல் செற்றை வோஸ்னியாக்கி 7-6 எனப் போராடிக் கைப்பற்றினார். இரண்டாவது செற்றில் அதிரடியாக விளையாடிய ஹலெப், அந்த செற்றை 6-3 என கைப்பற்றினார். அதைத்தொடர்ந்து நடைபெற்ற மூன்றாவது செற்றை வோஸ்னியாக்கி 6-4 எனக் கைப்பற்றினார். இறுதியில் 7-6, 3-6, 6-4 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்ற வோஸ்னியாக்கி சம்பியன் பட்டத்தை தட்டிச்சென்றார்.

இது அவரது முதல் அவுஸ்ரேலியா பகிரங்க கிராண்ட்ஸ்லாம் பட்டமாகும். (அ)

## வேகத்தால் வென்ற இந்தியா

ஜோகன்னஸ்பேர்க், ஜன.28

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் சமியின் அபார பந்து வீச்சால் இந்திய அணி வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்காவின் ஜோகன்னஸ்பேர்க்கில் 3 ஆவது டெஸ்ட் போட்டியின் 5 ம் நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. இதில் 247 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு விளையாடிய தென்னாபிரிக்க அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 177 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

இதனால் 63 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றி பெற்றது.

இந்தியப் பந்துவீச்சாளர்கள் அபாரமாகப் பந்துவீசி அணியின் வெற்றிக்கு உதவினர்.

முகமட் சமி அதிகபட்சமாக 5 விக்கெட்டுகளையும், இஷாந்த், பும்ரா தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட இந்த தொடரில் 2-1 என்ற கணக்கில் தொடரை தென்னாப்பிரிக்கா வென்றது. (அ)




இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 28.01.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.